IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS :வாசா.2) Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 08.01.2025 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண். 67/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மருதாச்சலம் | தாலூக்கா | வீரகேரளம் |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | கிராமம் | பெரியதோட்டகாலனி |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வாசா. 2 ஆக 08.01.2025 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் நபர். எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வாதி எனக்கு உறவினர் இல்லை. உதயகுமாருக்கு எந்த திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் நினைவில்லை. நான் திருமணத்தில் கலந்து கொண்டதற்கு ஆதாரமாக புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உதயகுமாரும், 3ம் பிரதிவாதியும் பிரிந்துவிட்ட விவரம் எனக்கு நான் அருகில் வசிப்பதால் எனக்கு தெரியும். திருமணம் நடைபெற்று 1 ½ வருடம் கழித்து பிரிந்து சென்றுவிட்டார். கௌரி யாரை திருமணம் செய்து கொண்டார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. நான் வாதிக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் தரப்பினரான எனக்கு இறந்துபோன

உதயகுமாருக்கு கோகிலா மட்டும் தான் வாரிசு என்று சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/மருதாச்சலம்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur